30th March 1966]

இரண்டைப் பார்க்கும்போது தஞ்சாவூரில் உள்ள சொசைடி நன்றாக வேலை செய்கிறது. அதைப்பற்றி ஒன்றும் இல்லை. அது மாதிரி இங்கேயும் செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : விவசாயிகளுக்கு உரம் கூட்டுறவு சொசைடி மூலமாக கொடுக்கப்படுகிறது. இந்த வருஷம் இம்மாதிரி கிடைப்பது அரிதாக இருக்கும். ஆகையால் இதை விவசாய இலாக்கா மூலமாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கூட்டுறவு சொசைடி மூலமாகப் பணமோ உரமோ பாக்கேஜ் ஸ்கீமில் கொடுக்கப்பட்டு வருகின்றன. சொசைடி மூலமாகக் கொடுப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த ஏ.டி.டி. 27 விதை வேறு மாவட்டங்களுக்கும் கொடுக்கப்பட்டதா ? அது நிறைய உற்பத்தியைப் பெருக்குகிறது என்று சொல்லப்படுகிறதே, அதை மற்ற மாவட்டங்களுக்குக் கொடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : படிப்படியாக எல்லா மாவட்டங்களுக்கும், அதுவும் டெல்டா பகுதிகளுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வரும். ஓரளவு பரீட்சார்த்தமாக முயற்சி செய்து வெற்றி கண்டிருக்கிறோம். இதர மாவட்டங்களுக்கும் படிப்படியாகக் கொண்டு வரலாம்.

வெண்ணெய் தயாரிப்பு

***502 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேர்க்கடலையிலிருந்து வெண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க திட்டம் பரிசீலிக்கப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ? எங்கெங்கு ?

THE HON. SRI. R. VENKATARAMAN : (a) No.

(b) Does not arise.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிலிருந்து மணிலா பயிர், மணிலா எண்ணை, மணிலா புண்ணாக்கு இவைகளெல்லாம் வெளிநாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதை விட்டு விட்டு நம்முடைய மணிலா பயிரிலேயிருந்து ஈடபல் கேக்ஸ் உற்பத்திச் செய்வதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய ராஜ்யத்தில் இருந்து ஏராளமாக மணிலாப் பயிர் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று என்னிடத்தில் தகவல் இல்லை. நம்முடைய நாட்டிலே வனஸ்பதி பாக்டரிகள் வந்துவிட்டன. இந்நாட்டு தேவை போக எவ்வளவு தூரம் அன்னிய செலாவணி சம்பாதிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோமோ அந்த அளவிற்குத்தான் ஏற்றுமதி செய்யப்படும்.